மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.86/2020

வாக்குமூலம்: வா.சா.1 ஆறுமுகம்

<u>02.09.2023:</u> சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u> 1) வாய்க்கால் பொறுத்து பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளேன். வேறு பரிகாரம் கேட்கவில்லை. வாய்க்கல் நீளம் மற்றும் அகல விபரம் நானும் எனது சகோதரரும் செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாய்க்காலின் நீளம் மற்றும் அகலம் குறிப்பிட்டு நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பொதுக்கிணற்றுக்கு வடபுறமாக கிழமேலாகவும், அதன் தொடர்ச்சியாக கிழக்கோட்டில் தென்வடலாக எனது பூமியில் வாய்க்கால் இருந்ததா என்றால் இருந்தது. அந்த வாய்க்காலை அழித்து எனது பூமியுடன் சேர்த்துவிட்டேனா என்றால் இல்லை. அது பாதையாக மாற்றப்பட்டுவிட்டது.

2) நான் மேற்படி வாய்க்காலை அழித்து எனது பூமியுடன் சேர்த்து தென்னங்கன்று வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பொதுத்தடத்தின் அகலம் 4 மீட்டர் ஆகும். அந்த பொதுப்பாதை நேர் தெற்கு முகமாகச்சென்று பின்பு மேற்குமுகமாக கிணறு வரை செல்கிறது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை நான் படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த அறிக்கையில் கண்டுள்ள விசயங்களை எனது வழக்கறிஞர் மூலம் நான் தெரிந்து கொண்டேன்.

3) பொதுப்பாதையில் பூமிக்கடியில் பாகப்பிரிவினை செய்துகொண்ட பிறகு 3 வருடங்கள் கழித்து குழாய் பதித்தோம். நான் தாவா பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் அதன் அகலம் குறுகிவிட்டது என்றும், அதைத்தான் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காட்டியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. பொதுவாய்க்காலில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொது வாய்க்காலில் நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், நான் ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ள தென்னை மரங்களின் சோகைகள் பாதையின் மீது படர்ந்துள்ளதால் போக்குவரத்க்கு இடையூராக உள்ளது என்றால் சரிதான். அந்த கிளைகளை வெட்டிக்கொள்ளலாம்.

4) பொதுப்பாதையில் நானும், 2ம் பிரதிவாதியும் பொதுவாக செலவு செய்து பூமிக்கு அடியில் குழாய் பதித்துள்ளோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் பூமிக்கு வடபுறமாகவும், பொதுப்பாதைக்கு மேல்புறமாகவும் பொது மடை உள்ளது என்றால் சரியல்ல. அந்த மடை வழியாகத்தான் தெற்கு முகமாக 2ம் பிரதிவாதி பூமிக்கு அடியில் குழாய் பதித்து தனது நிலங்களுக்கு நீர் பாய்ச்சி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா பிரச்சனை சம்பந்தமாக கீரனூர் காவல் நிலையத்தில் என் மீது குற்ற வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) தனிக்கிணற்று நீரை பொதுப்பாதை வழியாக தெற்கில் உள்ள பூமிக்கு குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு செல்வது சம்மந்தமாக பாக ஆவணத்தில் சரத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. தனிக்கிணற்று நீரை பொதுப்பாதை வழியாக நான் குழாய் அமைத்து எனது வேறு நிலத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வதால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. தனிக்கிணற்று தண்ணீரை குழாய் அமைத்து எனது வேறு நிலத்திற்கு கொண்டு செல்லக்கூடாது என்று பிரதிவாதிகள் தடுத்ததால்தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(உபய வாதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.09.02 16:19:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.